# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## இரண்டாம் வருடப் பரீட்சை கலை கலாச்சாரப் பீடம் – 2015/2016
## முதலாம் அரையாண்டு (பங்குனி-ஆனி, 2019)
## NIT 2120 – Introduction to Computational Arts I
### செயன்முறைப் பரீட்சை

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **நேரம்: 2 மணித்தியாலங்கள்**

**அறிவுறுத்தல்கள்:**

- உங்களது சுட்டிலக்கத்தின் (Index No) பெயரில் உறையொன்றினை (Folder) கணிமேசையில் (Desktop) உருவாக்கவும்.
- உங்களது கணிமேசையில் தரப்பட்டுள்ள படங்களை மாத்திரம் பாவிக்க வேண்டும்.

Q1) கீழே தரப்பட்டுள்ளவாறு ஒரு அட்டையினை போட்டொசொப் (Photoshop) இனைப் பயன்படுத்தி உருவாக்கவும். [40 marks]

கோப்பின் அளவு (File size)

a. அகலம் (Width) = 300 pixels

b. உயரம் (Height) = 400 pixels

c. பிரிதிறன் (Resolution) = 72 ppi



Q2) இலங்கை அரசாங்கமானது வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் வருகை தரச் செய்து பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு முடிவு செய்துள்ளது எனக் கருதுக. மலைகள் (Hills), சிறு காடுகள் (Jungles), கடற்கரைகள் (Beaches), சரணாலயங்கள் (Sanctuaries), நீர்வீழ்ச்சிகள் (Waterfalls) போன்றவை இலங்கையில் காணப்படும் சில முக்கிய பகுதிகளாகும். இவற்றினைக் கருத்தில் கொண்டு ஒரு சுவரொட்டியினை (Poster) அதிகளவு சுற்றுலாப் பயணிகளை கவரும் விதமாக உருவாக்கி அதனை இணையத் தளத்தில் பதிவேற்றும் பொறுப்பினை அரசாங்கமானது உங்களுக்கு வழங்கியுள்ளது எனக் கருதுக.

போட்டொசொப் (Photoshop) இனைப் பயன்படுத்தி ஒரு சுவரொட்டியினை உருவாக்கி அதனை *JPEG* மற்றும் *Photoshop (PSD)* ஆகிய வகைகளில் (Format) அறிவுறுத்தலில் உருவாக்கிய உறையினுள் சேமிக்கவும்.

நீர் சுவரொட்டியினை உருவாக்கும் போது பின்வருவனவும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்:

i. கோப்பின் அளவு (File size)
   a) அகலம் (Width) = 500 pixels
   b) உயரம் (Height) = 600 pixels
   c) பிரிதிறன் (Resolution) = 72 ppi

ii. உங்களினுடைய சுவரொட்டியினை காட்சிப்படுத்தும்போது பார்ப்பவர்களைக் கவரும் விதத்தில் சுவரொட்டியானது இருக்க வேண்டும். அத்துடன் அச்சுவரொட்டியினைப் பார்த்தவுடன் உடனடியாகவே வெளிநாட்டவர்கள் இலங்கையின் அழகை இரசிப்பதற்கு இலங்கைக்கு வரும் உணர்வைத் தூண்டுதல் வேண்டும்.

iii. தேவை ஏற்படின் ஏதேனும் வசனங்களை நீர் சுயமாக உங்கள் சுவரொட்டியினுள் உள்ளடக்கலாம்.

[60 marks]